(பேரவைத் தலைவர்)

கேள்வி பட்டியலில் இடம்பெற்றுள்ளது. அந்த அம்மையார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று எண்ணுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் கட்சியைப் பற்றிக் குறிப்பிட்டதால் இதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கேள்விகள் அனுமதிப்பதில் எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர் கலந்து கொள்வது.

*திருமதி. தா. இராசாம்பாள் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு விழாக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் அழைப்பிதழில் பெயர் சேர்க்கப்படாமல் விடப்பட்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே அண்மையில் ஒரு விழாவில் என்னுடைய பெயர் விடுபட்டதால் சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கவனத்திற்கு நான் முன்னதாகவே கொண்டு வந்திருந்தும் அந்த அமைச்சர் விழாவிலே கலந்து கொண்டுள்ளார், எனக்கு அழைப்பு இல்லை. இப்படி பல நிகழ்ச்சிகள் என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல: பல்வேறு தொகுதிகளில் நடைபெறுகின்றன,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அரசுக்கு நீங்கள் எழுதி அனுப்பி, பதில் பெற்றுக்கொள்ளலாம். (கூச்சல், குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசக் கூடாது. இங்கே கோபப்படவும் கூடாது. எல்லோரும் உட்காருங்கள்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: ஆளுங்கட்சி உறுப்பினர் பேசக் கூடாதா?

THIRU T. VENKATA REDDY: Whenever the opposition members speak. it has become the practice to obstruct them.

MR. SPEAKER: What is the point This is not connected with you.

திருமதி தா. இராசாம்பாள்; தற்போது என்னுடைய தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் என் பெயர் விடப்பட்டிருக்கிறது என்று தெரிந்து. நான் முன்கூட்டியே அமைச்சருக்கு ஆள் மூலம் தகவல் தெரிவித்தும், எனக்கு அழைப்பு வரவில்லை, அமைச்சர் கலந்துகொண்டார். மேலும் இந்த மாதிரியான அரசு விழாக்களை நடத்தும் அதிகாரிகள் தங்களுடைய சம்பளத்திலிருந்து அதற்கான தொகையை செலவழிகிறார்களா அல்லது அரசு அதற்கான தொகையைக் கொடுக்கிறதா என்பதை அமைச்சர் விள்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இப்படி நடை

(திருமதி. தா. இராசாம்பாள்)

பெற்ற தவறுக்கு மன்னிப்புக் கோரவேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமில்லாவிட்டாலும், தவறுக்கு தகுந்த தண்டணை அளிப்பதுடன் மேலும் இத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தற்போது என்னிடத்தில் அது சம்பந்தமாக எந்த விவரங்களும் இல்லை. ஆனாலும் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். அரசு நடத்துகின்ற நிகழ்ச்சிகளில் அந்தந்த தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரை அழைக்க வேண்டுமென்ற மரபை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் மற்ற அமைப்புகள், நடத்துகின்ற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சில சேவா சங்கங்கள், மற்ற பல அமைப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அமைப்புகள் நடத்துகின்ற நிகழ்ச்சிகளில், அவர்கள் யார் யாரை வரவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களை அழைக்க முழு உரிமை இருக்கிறது. அதை நாம் புறக்கணித்து விட முடியாது. ஆனால் அரசு செலவிலே அரசாங்கம் நடத்துகின்ற நிகழ்ச்சிகளுக்கு சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்டாயம் அழைக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அரசு நடத்துகின்ற விழாவிற்குச் சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அழைப்பது சரிதான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். போஸ்ட் ஆபீஸ், இரயில்வே ஸ்டேஷன் போன்றவற்றைத் திறக்கின்ற விழாக்களுக்குச் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை அழைப்பதற்கு அல்லது அமைச்சரை அழைப்பதற்குரிய மரபை மத்திய அரசு கடைப்பிடிக்கின்றதா?

[பதில் இல்லை]

இ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தேர்தல் அறிக்கையில் காவல் துறையினர் போராட்டம் நடத்தலாம் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியிருப்பதாக ஒரு தவறான தகவலைத் தந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்மீது நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனை தந்துள்ளேன்......

திரு. அ. ரகுமான்கான்: சார், நான் ரெடி, இப்போது எடுத்துக்கொள்ளலாம். நான் தயாராக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மி. வின்சென்ட் அவர்கள் கொடுத்த பிரச்சனை பற்றி திரு. ரகுமான்கான் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பதில் வரட்டும். வந்தபின் எடுத்துக்கொள்கிறேன்.